பக்கங்கள் 12

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 30 செவ்வாய்க்கிழமை 15.08.2023 அதிர்வு 15

## வாகனங்கள் இறக்குமதி கட்டுப்பாடுகளில் தளர்வு

மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 04




# மடு அன்னை திருவிழாவில் ஜனாதிபதி லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

**மன்னாரை எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை என்று ரணில் உறுதி**

**தேசிய ஒற்றுமை, நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஜனாதிபதியின் முயற்சிக்கு வத்திக்கான் மற்றும் கத்தோலிக்க சபை ஆசீர்வாதம்**

மன்னாரை எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். மன்னார் மடு மாதா தேவாலயத் திருவிழாவில் இன்று (15) கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். 04





## மேர்வினுக்கு மூளை பழுது உளவள் சிகிச்சை அவசியம்

**சி.வி.கே.சிவஞானம் கூறுகிறார்**



எனது பார்வையில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு மூளை பழுது உள்ளது போல் தெரிகிறது என வடக்கு மாகாண சபையின் 05



## '13' ஐ நடைமுறைப்படுத்த ரணிலுக்கு ஆணை இல்லை

**பேராசிரியர் மெதகொட தேரர் காட்டம்**


"13 ஆவது திருத்தச்சட்டம் உள்ளடக்கப்படாத புதியதொரு அரசமைப்புக்கே நாட்டு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். எனவே, 13 ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டுமெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் 04



## அதிகாலை கோர விபத்து மூவர் பரிதாப உயிரிழப்பு

**8 பேர் வைத்தியசாலையில்**

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்குளம் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற வாகன 05



## சீனா புறப்பட்டார் பிரதமர் தினேஷ்




பிரதமர் தினேஷ் குணவர்தன நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனாவிற்கு பயணமாகியுள்ளார்.

பிரதமர் நேற்று மாலை நாட்டிலிருந்து பயணமாகியுள்ளார் என 04

## மோ.சைக்கிளில் வந்த ஆயுதக் கும்பல் கல்வியங்காட்டில் பெரும் அட்டகாசம்!

**வீட்டுக்குள் புகுந்து அடித்து, நொருக்கி அடாவடித்தனம்**

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் உள்ள ஒரு வீட்டின் மீது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஆயுதங்களுடன் நுழைந்து 05











# தலைமன்னார் - கொழும்பு இடையில் கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்க முடிவு

## மடு திருத்தலத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**(மன்னார் நிருபர்)**

தலைமன்னாருக்கும் கொழும்புக்கும் இடையில் கடுகதி ரயில் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை (15) காலை திருப்பலி ஒப்புக் கொடுத்தலுடன் ஆரம்பமானது.

இதில் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் கருத்து தெரிவித்தார்.

இதன் போதே, தலைமன்னாருக்கும் கொழும்புக்கும் இடையில் கடுகதி ரயில் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டிருப்பதாகவும் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி சேவையானது ஆரம்பித்து வைக்கப்பட்ட உள்ளது என்றும் தெரிவித்தார்.

மக்களது பயணத்தை இலகுவாக்கும் வகையில் இந்தச் சேவை அமையும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மடு திருத்தலத்தில் வைத்து மேலும் தெரிவித்தார்.

# இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் கிழக்கு மாகாணத்தில் ‘சோலர்’கள்





**(கே. எ. ஹமீட்)**

கிழக்கு மாகாணத்தில் இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் ‘சோலர்’ பனல்களை நிறுவுவதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இணக்கம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் இடையிலான கலந்துரையாடல் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று (14) இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத் தக்க எரிசக்திக்கான சாலை வரைபடத்தைத் திட்டமிடுதல், இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் அரசு அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் மதத் தலங்களுக்கு இலவச ‘சோலர்’ பனல்களை நிறுவுவதற்கு காஞ்சன விஜயசேகர இணக்கம் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபையின் தலைவர், பிரதம செயலாளர், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபர்கள், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
CENTRALPAR JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

# இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினம்

## யாழ்ப்பாணத்திலும் இன்று கொடியேற்றம்



(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் 77வது சுதந்திர தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கொடியேற்றப்பட்டு கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இன்று(15.08.2023) காலை 9 மணியளவில் இந்தியாவின் தேசியக்கொடியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஏற்றி வைத்தார்.

இதன்போது இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தார்.

இந்திய தேச விடுதலைப் போராட்டத்தில் உயர் நீத்தவர்களை நினைவு கூரும் வகையிலான நினைவுக்கல் ஒன்றையும் துணைத்தூதுவர் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந் நிகழ்வில் மதத் தலைவர்கள், தூதரக அதிகாரிகள், பணியாளர்கள்,கல்வியலாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மடு அன்னை...

இந்த வருடம் மடுமாதா திருவிழா கூட்டுத் திருப்பலிப் பூஜையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணைந்து கொண்டமை விசேட அம்சமாகும். திருவிழா திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டதை அடுத்து மடுமாதாவின் திருச்சுரூப பவனி இடம்பெற்றது. வருடாந்த மடுமாத திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மடு மாதாவுக்கு மகுடம் சூட்டப்பட்டு 2024ஆம் ஆண்டுடன் நூறு ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை நினைவு கூரும் நிகழ்வுகளை வருடம் முழுவதும் நடத்த ஆலய நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பாராட்டுக்குரியது எனவும், வத்திக்கான் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் ஆசீர்வாதமும் இதற்குக் கிடைக்கும் எனவும் மடு திருவிழாவில் கலந்துகொண்ட இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி அதி வண. பிரையன் உடைக்வே ஆண்டகை தெரிவித்தார்.

நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேண வேண்டிய பாரிய பொறுப்பு மதத் தலைவர்களுக்கு உண்டு என்று சுட்டிக்காட்டிய பிரையன் உடைக்வே ஆண்டகை, நாட்டைப் பிளவுபடுத்தும் மத முகவராக மாறுவதா அல்லது நாட்டை ஒன்றிணைக்கும் மதத் தலைவராக மாறுவாரா என்பது அவரவர் செய்யும் செயற்பாடுகளிலேயே தீர்மானிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

“மடு தேவாலய வருடாந்தத் திருவிழா என்பது எமது நாட்டு கலாசாரத்தின் ஓர் அங்கம் என்றே கூற வேண்டும். இந்தத் திருவிழாவை தேசிய நிகழ்வாகக் கருதி அதனைப் பாதுகாக்கவும் தொடர்ச்சியாக நடத்தவும் தேவையான ஆதரவை அரசு வழங்கி வருகின்றது. அத்தோடு வருடாந்த மடு திருவிழாவை நடத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து அருட்தந்தையர்களுக்கும் அரசு சார்பில் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மடுமாதாவிடம் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதம் பெற ஏராளமான பக்தர்கள் இங்கு வருகிறார்கள். கடந்த வருடம் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, பெருமளவான மக்கள் இங்கு வந்து மடு மாதாவின் ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் நாடினர். அந்த கடினமான நிலைமையில் மடு மாதாவின் ஆசீர்வாதமும் எமக்கு பலமாக அமைந்தது என்பதை குறிப்பிட வேண்டும்.

மடு மாதா குடிகொண்டிருக்கும் இந்த மன்னார் பிரதேசம் அதிகளவு புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு கிடைக்கும் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் பசுமை ஆற்றல் மூலம் மன்னார் மாவட்டத்தை எரிசக்தி மையமாக உருவாக்க முடியும். மேலும், பூநகரியை எரிசக்தி கிராமமாக உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். இந்தப் புனித பூமியும், வனமும் பாதுகாக்கப்படும் வகையிலேயே இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நான் கூற விரும்புகின்றேன். மேலும், இப்பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளின் போது இங்குள்ள அருட்தந்தைகளின் ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் பெறுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன்.

அடுத்த மாதம் முதல் மன்னாரிலிருந்து கொழும்புக்கு நகர்சேர் கடுகதி ரயில் சேவையை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சார்ளஸ் நிர்மலநாதன் எம்.பியின் வேண்டுகோளுக்கு இணங்க நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்படுகின்றது. அவரின் வேண்டுகோளுக்கு அமைய வவுனியாவில் சீனி தொழிற்சாலையொன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த அனைத்துச் செயற்பாடுகளின் ஊடாகவும் 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்ப எதிர்பார்க்கின்றோம். அதற்கு உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன்.” - என்றார்.

மன்னார் ஆயர் கலாநிதி அதி வண. இமானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை, இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி மன்றத் தலைவர் கலாநிதி சந்ரா பெர்ணான்டோ உள்ளிட்ட அருட்தந்தையர்கள், கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அமைச்சர் நஸீர் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்கள் அருந்திக பெர்னாண்டோ, காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிப்பாளர் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் இலட்சக்கணக்கான பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சீனா புறப்பட்டார்...

பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

7 ஆவது சீன - தெற்காசிய எக்ஸ்போ கண்காட்சி மற்றும் 27 ஆவது சீனா குன்மிங் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி ஆகியவற்றில் பிரதம அதிதியாக பிரதமர் கலந்து கொள்ளவுள்ளார்.

சீன வர்த்தக அமைச்சு மற்றும் யுனான் மாகாண அரசு இணைந்து இந்தக் கண்காட்சியை நடத்துகின்றன.

சீனாவின் குன்மிங் நகரில் நாளை முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்த மாபெரும் வர்த்தக கண்காட்சியில் 60 நாடுகள் பங்கேற்கவுள்ளமையுடன், அனைத்து தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளும் பிராந்திய பொருளாதார பங்குடைமை அமைப்பின் உறுப்பு நாடுகளும் இதில் அடங்குகின்றன எனப் பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

‘பொது அபிவிருத்திக்கான ஒருமைப்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு’ எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, ஜானக வக்கும்புர மற்றும் கனக ஹேரத், நடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன மற்றும் பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க ஆகியோரும் சீனாவிற்கு பயணமாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 13ஐ நடைமுறைப்படுத்த

ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும்.” - என்று பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“மன்னர் ஆட்சியில்கூட நாடு பிளவுபடுவதை ஏற்புடைய நடவடிக்கையாக ஏற்கப்படவில்லை. மகாசங்கத்தினரும் ஒற்றையாட்சிக்காகவே மன்னர்களைப் பாதுகாத்தனர்.

தற்போது நாட்டை பிளவுபடுத்தாமல் ரணிலுக்கு நித்திரை வரவில்லையெனில், அவருக்கு ஒரு வாய்ப்பை நாம் வழங்குகின்றோம். அதாவது ஜனாதிபதி தேர்தலை அறிவிக்கவும். 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்க ஆணை தாருங்கள் என மக்களிடம் கேட்கட்டும்.

பொலிஸ் அதிகாரம் பற்றி பேசப்படுகின்றது. அவ்வாறு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால், குருந்தூர் மலை விவகாரத்தின்போது பௌத்தர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கும் அல்லவா?

எமக்கு ஐக்கிய இலங்கை அல்ல, ஒற்றையாட்சியே முக்கியம். தாய் நாட்டுக்கு கடன் இல்லாமல் தமது இறுதி மூச்சை விடுவதற்கு எதிர்பார்த்துள்ளவர்கள் இதற்காக ஒன்றிணைய வேண்டும்.

ஜனாதிபதி ரணிலுக்கு மக்கள் ஆணை இல்லை. அவர் இந்தப் பணியை கைவிட வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிடைத்த ஆணையில்தான் ரணில் இருக்கின்றார். 13 இல்லாத புதிய அரசமைப்புக்காகவே கோட்டாவுக்கு மக்கள் ஆணை வழங்கினர்.” - என்றார்.

## வாகனங்கள்...

பஸ்கள், லொறிகள், கொள்கலன் வாகனங்கள் மற்றும் பாரவூர்திகள் உள்ளிட்ட பொது போக்குவரத்துக்கான பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் தளர்த்தப்பட்டுள்ளன.

இதேவேளை, மேலும் பல பொருள்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பான முன்மொழிவுக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# மட்டு கரடியனாற்றில் உயிரிழந்த யானை!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள மரப்பாலம் பிரதேசத்தில் யாணை ஒன்று உயிரிழந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை காலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த யானை 35 வயதுடையது எனவும் வைத்திய பரிசோதனைக்கு பின்னர் இறந்தமைக்கான காரணம் தெரியவரும் எனவும், அதன் பினர் வன ஜீவர திணைக்கள அதிகாரிகள் அதனை அகற்றி கிடங்கு வெட்டி மூடுவதற்கான நடவடிக்கையை எடுப்பர் எனவும் அவர் தெரிவித்தார்.

# இன்றிரவு முதல் வழமைக்கு திரும்பும் நுரைச்சோலை அனல் மின் நிலையம்

செயலிழந்துள்ள நுரைச்சோலை லக் விஜய அனல் மின் நிலையத்தின் இரண்டாவது மின் பிறப்பாக்கி இன்றிரவு 8 மணி முதல் மீண்டும் மின் கட்டமைப்புடன் இணைத்துக்கொள்ளப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

திருத்தப்பணிகள் நிறைவடைந்தமையை அடுத்து இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது பழுதடைந்திருந்தமையால் தேசிய மின் கட்டமைப்பிற்கு கிடைக்க வேண்டிய 270 மெகாவாட் மின்சாரம் இழக்கப்பட்டதாக மின்சார சபை தெரிவித்திருந்தது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இரண்டாவது மின் பிறப்பாக்கி தொழில்நுட்ப கோளாறு காரணமாக கடந்த 08 ஆம் திகதி திடீரென செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மேர்வினுக்கு...**

அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

மேர்வின் அரசியலில் இல்லாத கட்சிகள் இல்லை. எல்லா கட்சியிலும் இருந்து, எல்லா கட்சியினரும் அவரை துரத்தியே உள்ளார்கள். தான் இருக்கின்றார் என்பதை காண்பிப்பதற்காக மடமைத்தனமான பேச்சுக்களை பேசுகின்றார்.

இவரை கணக்கில் எடுப்பதே மிகவும் பிழை. அவரை கவனிக்காமல் அவர் பாட்டிலேயே செல்வதற்கு விட்டுவிட வேண்டும். உண்மையாகவே இந்த நாட்டில் சட்டம், ஒழுங்குகள் இருக்கின்றது என்றால் பொலிஸார் இவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஏனென்றால் இவர் ஒன்று வன்முறையை தூண்டுகின்றார். இரண்டாவது இனமோதலை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றார். இவருக்கு இன மோதலை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு மனநல பிரச்சினை உள்ளதென்றால் அதற்கான சிகிச்சையை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இல்லையேல் இவரை இந்த இரண்டு குற்றத்திற்காகவும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

வன்முறையைத் தூண்டி தலையை கொய்வது என்று கூறுகின்றார். கொய்வ–தற்கு இது என்ன தேயிலை கொழுந்தா? இவையெல்லாம் உளநிலை சரியில்லாதவர் பேசும் பேச்சு . ஆகவே இவரை கணக்கில் எடுப்பது பிழை என்றே நான் நினைக்கிறேன். –என தெரிவித்துள்ளார்.

---

**மோட்டார் சைக்கிள்...**

வன்முறையில் ஈடுபட்டு சேதம் விளைவித்துள்ளது.

கல்வியங்காட்டில் உள்ள பூதரவராயர் வீதியில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டின் மீது இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை பெண்களின் ஆடை அணிந்து வந்த ஒருவர் உட்பட்ட ஆயுதங்களுடன் வந்த மர்மக் கும்பலே இப்படி அட்டூழியத்தில் ஈடுபட்டனர்.

வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், புத்தகப்பை என்பன தீயிட்டு கொளுத்தப்பட்டன. ஜன்னல் கண்ணாடிகள், கண்காணிப்பு கமராக்கள் என்பனவும் அடித்து நொருக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் கண்காணிப்பு கமராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாக கொண்டு கோப்பாய் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள தரப்பே இங்குள்ள வன்முறை கும்பலுக்கு பணம் அனுப்பி இந்த வன்முறையில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கல்வியங்காட்டில் இவ்வாறான வன்முறை சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றபோதும் குற்றவாளிகளோ வன்முறைக் கும்பலோ கைது செய்யப்படுவதில்லை என அப்பகுதி மக்கள் பொலிஸார் மீது குற்றஞ்சாட்டுகின்றனர்.

**அதிகாலை...**

விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏ – 9 பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் 8 பேர் காயங்களுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வான் ஒன்று, வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தி ஒன்றுடன் மோதுண்டதுடன், அந்தப் பாரவூர்தி அதன் முன்னால் இருந்த மற்றுமொரு பாரவூர்தியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, பாரவூர்திக்குப் பின்னால் நின்றிருந்த ஒருவரும் வானில் பயணித்த இருவரும் படுகாயமடைந்து, மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்கள் மூவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, வான் மற்றும் பார்வூர்திகளில் பயணித்த 3 பெண்கள் உள்ளிட்ட 8 பேர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மற்றும் மாங்குளம் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் யாழ்ப்பாணம், வெல்லம்பிட்டி மற்றும் முல்லேரியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 58, 46 மற்றும் 38 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலுக்கு சரியான பதிலடி

நாட்டில் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணும் விடயத்தில் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்புமே நீதி, நியாயம், யதார்த்தம் ஆகியவற்றை புரிந்து, உள்வாங்கி, உண்மையாக நடப்பதாகத் தெரியவில்லை. 75 ஆண்டுகள் தாண்டியும் இப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடுவதற்கு நீதி,நியாயம், நேர்மை மற்றும் இதய சுத்தியுடன் இந்த விடயத்தை அணுகும் திடசங்கற்பமும் அரசியல் தற்றுணிச்சலும் மிக்க தலைமைகள் இல்லை என்பதே முக்கிய காரணம்.

இப்போதும் கூட தமது சுயநல அரசியலுக்காக - தமது அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்காக - '13' என்ற தாயக்கட்டையை நாடாளுமன்றத்தில் உருட்டி விடுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பது வெளிப்படையாக - அப்பட்டமாக - துலாம்பரமாக - தெரியும் உண்மை.

அரசமைப்பில் இருக்கும் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான சட்டவாக்கங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவது நிறைவேற்று அதிகாரத்தை வைத்திருக்கும் ஜனாதிபதியின் பொறுப்பு. ஆனால் தம்முடைய வேலையைத் தாம் செய்யாமல், மெதுவாகப் பந்தை நாடாளுமன்றக் களத்துக்குள் உருட்டி விடுகின்றார் அவர். காலத்தை இழுத்தடித்து, தாம் எதிர்நோக்கும் ஜனாதிபதித் தேர்தல் வரை வேறு தேர்தல்களை நடத்தாமல் தவிர்க்கச் செய்து, தமக்குள் முரண்பட்டு நிற்கும் இனக் குழுமங்களின் ஆதரவைத் தம் பக்கம் தக்க வைத்திருப்பதற்காக, அவர் கொளுத்தி போட்ட வெடிதான் இந்த 13. இது துலாம்பரமானது.

அரசமைப்பில் இருக்கும் 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி பதவியில் இருப்பவர் யாரிடமும் கேட்கத் தேவையில்லை. தம்பாட்டிலேயே அதைச் செய்யலாம். அதற்கான நிறவேற்றுத்துறை அதிகாரம் அவரிடம்தான் - அவரிடம் மட்டும்தான் - இருக்கின்றது.

ஆனால், அதை விடுத்து, தமது அரசியல் தேவைக்காக அந்தப் பந்தை - 13 ஆம் திருத்த விவகாரத்தை - மெல்ல நாடாளுமன்றக் களத்துக்குள் ஜனாதிபதி உருட்டி விட, அதே வழியில் சென்று அவருக்குப் பதிலடி கொடுத்திருக்கின்றார் பேராசிரியர் வண. மெதகொட அபயதிஸ்ஸ தேரர்.

"முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் ஆதரவில் ஜனாதிபதி பதவிக்கு வந்தவர் ரணில் விக்கிரமசிங்க. அவருக்கு 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் இல்லை. ஜனாதிபதி தேர்தலை அறிவித்து, 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரத்தை மக்களிடம் அவர் கேட்க வேண்டும். அதற்கான அதிகாரத்தை மக்கள் அவருக்கு வழங்கத் தயாராக இருந்தால் அவர் அதனை செய்யலாம்." -என்கிறார் மெதகொட அபயதிஸ்ஸ தேரர்.

13ஆம் திருத்த நடைமுறையாக்கம் தொடர்பில் தான் செய்ய வேண்டியவற்றை செய்யாமல், நாடாளுமன்றத்திடம் பந்தை உருட்டத் தந்திரமாக முயல்கின்றார் ரணில். ரணிலின் வழியிலேயே போய், ஏன் நாடாளுமன்றத்திடம், மக்களிடமே அனுமதி கேளுங்கள் என்று சரியான - தக்க - பதிலடி தந்துள்ளார் தேரர். என்ன செய்யப் போகிறார் - என்ன பதில் கூறப் போகிறார் - ரணில்?

# சிறுவர் சித்திர போட்டியில் சாதனை



( வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டி 2022 இல் சம்மாந்துறை வலயப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சம்மாந்துறை செந்நெல் சாஹிரா மகாவித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றி வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா கல்லூரியின் அதிபர் யு.எல். முஹம்மட் இஸ்மாயில் தலைமையில் நேற்று (14) திங்கட்கிழமை நடைபெற்றது.

விழாவில் பாடசாலையின் இணைப்பாளர் எம்.எம்.எம். ஜௌபர், சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் சித்திரப்பாட இணைப்பாளர் எஸ்.எல் அப்துல் முனாப், ஆசிரியையான ஜனாபா எஸ்.எல் ஜன்னத் முன்னிலையில் மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டன.

# இலத்திரனியல் பற்றுச்சீட்டு அனுப்பும் பரீட்சார்த்த நிகழ்வு கிழக்கில் இன்று



(எம். எப். நவாஸ்)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் ந- ஆடீனு திட்டத்தின் ஓர் அங்கமாக, பற்றுச்சீட்டுக்களுக்கு பதிலாக, குறுஞ்செய்தி மூலம் இலத்திரனியல் பற்றுச்சீட்டு அனுப்பும் செயற்றிட்டம் இன்று அக்கரைப்பற்று பிரதேச செயலக, மாவட்ட பதிவாளர் பிரிவால் (15) ஆரம்பிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாகப் பிரதேச செயலாளரால் இந்த முறை ஆரம்பித்து வைக்கப்பட்டது. உதவி பிரதேச செயலாளர், மேலதிக மாவட்ட பதிவாளர், பதிவாளர் பிரிவு உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இலவச உர விநியோகம்: விவசாயிகள் மகிழ்ச்சி!




அம்பாறை அக்கரைப்பற்று கிழக்கு கம நலசேவை நிலையத்தின் கீழ் சிறு போக வேளாண்மை செய்கையில் ஈடுபட்ட 3200 ஹெக்ரெயர் நிலப் பரப்புக்கான அரசின் உரோமானிய திடடம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றது.

அம்பலன் ஓயா ,பன்னலகம, சேன நாயக்க, சாகாமம் மற்றும் சிறிய நீர்ப்பாசனம் உடன் மழை நீர் நிலைகளின் நீர்ப்பாசன பொறிமுறையைக் கொண்டு 3200 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் சிறுபோக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்ட விவசாயிகளுக்கான அரசின் இலவச உர மானிய விநியோகத் திட்டம் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று அக்கரைப்பற்று கிழக்கு கம நலசேவை நிலையத்தின் தலைமை அதிகாரி யூ.எல்.சம்சுதீன் தெரிவித்தார் .

இவை அரசின் உரமானியப் படிவம் ஒன்றின் ஊடாக வழங்கப்பட்டு பின்னர் அவை உர விநியோக பகுதிகளின் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை 1600 ஹெக்ரெயர் விவசாய செய்கை காணிகளுக்கான உரம் பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டதாகவும் மேலும் நிலுவையில் உள்ள காணிகளுக்கான உரம் வழங்கும் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக இடம்பெற்று வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில் அரசின் இந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கின்றோம். இருப்பினும் காலம் கடந்து விநியோகிக்கப்பட்டு வருவது வேதனை தரும் விடயம். நாங்கள் அதிக பணத்துக்கு உரங்களை கொள்வனவு செய்து, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். தற்பொழுது அறுவடை இடம் பெற்று வருகின்றது. இந்த நேரத்தில் உரம் வழங்கப்பட்டு வருகின்றது. மற்றும் நெல்லுக்கான உத்தரவாத விலை சந்தையில் இல்லாத காரணத்தால் 66 கிலோ உடைய ஒரு மூடை நெல் 4500 ரூபா முதல் 4800 ரூபாவரை கொள்வனவு செய்கின்றனர். குறிப்பாக ஒரு கிலோ 68 ரூபா முதல் 70ரூபாவரைதான் போகிறது. இதனால் இன்னும் பாதிக்கப்பட்டு வருகின்றோம் என்று தெரிவித்தனர்.

# சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றை சுத்தம் செய்யப் பணிப்பு

## நீர்ப்பாசன அமைச்சர் ரொசான் றனசிங்க விடுத்தார்



(கே எ ஹமீட் )

அம்பாறை மாவட்டத்தில் அக்கறைப்பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் அமைந்துள்ள சம்புக்களப்பு வடிச்சலுக்கு தடையாக நீர்த்தாவரங்கள் நிரம்பி உள்ளதாலும் மற்றும் அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றின் வடிச்சலுக்கு தடையாக உள்ளதாலும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இப்பிரதேசங்களில் முதலைகளின் தொல்லைகளால் பொதுமக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.


எனவே இப்பிரதேச விவசாயிகளின் நன்மை கருதியும், பொதுமக்களின் நன்மை கருதியும் இந்த வடிச்சல் பணிகளை ஆரம்பிக்குமாறு முன்னால் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்பாசன அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமா லெப்பை நீர்பாசன அமைச்சர் ரொசான் றனசிங்கவை நீர்பாசன அமைச்சில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் சம்புக்களப்பு, அட்டாளைச்சேனை கோணாவத்தை வடிச்சலை சீராக்கும் நோக்குடன் நீர்ப்பாசன திணைக்களத்தால் அக்கறைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட"எக்ஸ்வேட்டர் இயந்திரம்" நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் உள்ளது.

அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் அது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேச நீர்பாசன வடிச்சல் பணிகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே இவ் இயந்திரத்தை விரைவாக திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

இவ்விடயத்தை கேட்டறிந்த நீர்ப்பாசன அமைச்சர் ரொசான் றனசிங்க சம்புக்களப்பு,கோணாவத்தை ஆற்றைச் சுத்தப்படுத்தும் பணிகளை ஆரம்பிக்குமாறு பணிப்பாளர் நாயகத்துக்கு பணிப்புரை வழங்கினார்.

அத்துடன் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை பிரதேச விவசாய பாதைகளை புனரமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கியுள்ளார்.



# 11 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம்: சூரிய ஒளி மூலம் வழங்கத் திட்டம்

## வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தகவல்

சூரிய ஒளி மின்சாரத் திட்டத்தின் கீழ், அரைவாசிப் பணிகள் நிறைவடைந்த 11 ஆயிரம் வீடுகள் மின்சார விநியோகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த 11 ஆயிரம் வீடுகள் அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட 15 திட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த திட்டங்கள் 2015-2019 க்கு இடையில் செயல்படுத்தப்பட்டன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

குறைந்த வருமானம் பெறும் 25 ஆயிரம் வீடுகளுக்குச் சோலார் மூலம் மின்சாரம் வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த திட்டம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் மின் சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கூட்டு திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. பாதி கட்டி முடிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் 25 ஆயிரம் வீடுகளைத் தெரிவு செய்து அந்தந்த வீடுகளை பூரணப்படுத்தி சோலார் அமைக்க முன்மொழியப்பட்டது.

இதுவரை தெரிவு செய்யப்பட்டுள்ள 11 ஆயிரம் பாதி கட்டி முடிக்கப்பட்ட வீடுகளுக்கு மேலதிகமாக மேலும் 14 ஆயிரம் வீடுகளும் தெரிவு செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் ஊடாக 25 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவது மட்டுமின்றி, 500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க சக்தியை தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்காக சுமார் 650 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நேரடி முதலீடு செய்யப்படும். இந்தத் திட்டத்தின் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருள்கள் உள்ளூரிலேயே கொள்வனவு செய்யப்படும். ஏனைய பணத்துக்கு மாத்திரமே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 648 கிகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மின்சார உற்பத்தியின் காரணமாக, இலங்கைக்கான எரிபொருள் எண்ணெய் இறக்குமதியின் வருடாந்த சேமிப்பு 116.64 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான உதவியின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட பல வீடமைப்புத் திட்டங்கள் நிதிப் பிரச்சினைகளால் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அவ்வாறான வீடுகளை நிறைவு செய்வதற்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

குறிப்பாக மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை, அனுராதபுரம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய 11 மாவட்டங்களில் அரச காணிகளில் கிராமங்களாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளில் பாதி கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை பூரணப்படுத்தி சோலார் பேனல்கள் மூலம் மின்சாரம் முதல் கட்டத்தில் வழங்கப்படவுள்ளது.-என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 10 லட்சம் ரூபா பெறுமதியான திறன் பலகைகள் பாடசாலைகளுக்கு





( வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு வலயத்துக்கு உட்பட்ட பின்தங்கிய பல பாடசாலைகளுக்கு 10லட்சம் ரூபா பெறுமதியான திறன் பலகைகளை கனடாவில் வாழும் முனைக்காட்டை சேர்ந்த பொறியியலாளர் கோபாலபிள்ளை துரைராஜசிங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

முனைக்காடு கிராமத்திலே இருக்கும் விவேகானந்த மகா வித்தியாலயம் மற்றும் சாரதா வித்தியாலயம் ஆகியவற்றுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

# ஆலையடிவேம்பு மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள்





**(வடிவேல் டினேஸ்)**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் ஆலையடி வேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று (13) இடம் பெற்றது.

இதன் போது ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப் பட்டன. ஒரு நபருக்கு 3500 ரூபா பெறுமதியான பொதி வீதம் 20 பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டன.



# இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினம் இன்று: செங்கோட்டையில் தேசியக் கொடி ஏற்றினார் மோடி!





சுதந்திர தினத்தை முன்னிட்டு டில்லியில் உள்ள செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றினார். முன்னதாக, முப்படைகளின் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்பட்டுவருகிறது. இதையொட்டி அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலும் சுதந்திர தின கொண்டாட்டம் களைகட்டியுள்ளது.

டில்லி செங்கோட்டையில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஜூலை 26 முதல் செங்கோட்டை வளாகம் எஸ்.பி.ஜி. பாதுகாப்பு படையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. அங்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதுகாப்பு படை வீரர்கள் பாதுக்காப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி, காலை 7.30 மணி அளவில் டில்லி செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றி, நாட்டு மக்க ளுக்கு உரையாற்றினார்.

இந்த விழாவில் பிரதமர், மூத்த அமைச்சர்கள், முக்கிய பிரபலங்கள் பலர் பங்கேற்றனர். விழாவில் பல்வேறு துறைகளை சேர்ந்த 1,800 சிறப்பு விருந்தினர்களும் பங்கேற்றனர்.

# மணிப்பூரில் விரைவில் அமைதியேற்படுத்தப்படும்!

## பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர தின உரை



மணிப்பூர் மாநிலத்தில், விரைவில் அமைதியேற்படுத்தப்படும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 77 வது சுதந்திர தின நிகழ்வு, டெல்லி செங்கோட்டையில் இடம்பெற்றது.

இதன்போது, 10 ஆவது முறையாக தேசியக்கொடி ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போதே அவர், இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். இதன்போது பிரதமர் மோடி தொடர்ந்து உரையாற்றுகையில்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா தற்போது உலகின் முன்னணி நாடாகத் திகழ்கிறது. எனது குடும்பத்தில் உள்ள 140 கோடி மக்கள் இன்று சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார்கள். நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அனை வருக்கும் நான் எனது அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

மணிப்பூர் மக்களுக்கு ஆதரவாக நாடு இருக்கிறது. அங்கு அமைதி நிலவ வேண்டும். அமைதியின் மூலமே தீர்வு காண முடியும். தீர்வு காண்பதற்கான அனைத்து முயற்சி களையும் மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. இம்முறை இயற்கைப் பேரிடர் நாட்டின் பல பகுதிக ளில் கற்பனை செய்ய முடியாத பாதிப் புகளை உருவாக்கி இருக்கிறது. இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் எனது அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, நம்மிடம் மக்கள்தொகை, ஜனநாயகம், பன்முகத்தன்மை ஆகியவை உள்ளன. இவை, தேசத்தின் கனவுகளை நனவாக்கும் திறன் கொண்டவை. நான் கடந்த ஆயிரம் ஆண்டுகளைப் பற்றி பேசுகிறேன். ஏனெனில், நமது நாட்டிற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு இருப்பதை நான் காண்கிறேன். இந்த காலகட்டத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதும், நாம் நமது அடிகளை எவ்வாறு வைக்கிறோம் என்பதும், ஒன்றன்பின் ஒன்றாக நாம் எவ்வாறு நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்பதும் வரும் ஆயிரம் ஆண்டுகளில் நாடு பொன்னான காலத்தைப் படைக்கும் என்று தெரிவித்தார்.

# சென்னை கோட்டையில் தேசியக் கொடி ஏற்றினார் ஸ்டாலின்!

சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தேசியக் கொடியை ஏற்றினார்.

77 ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் தலை நகரான சென்னையில் உள்ள செயிண்ட் ஜோர்ஜ் கோட்டையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தேசியக் கொடியை இன்று ஏற்றி, கொடி வணக் கம் செலுத்தினார்.

இதனையடுத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் நாட்டு மக்களுக்கு உரை ஆற்றுகையில்,

தமிழ்நாடு மாநிலத்தின் முதல்வராக பொறுப்பேற்ற நான் மூன்றாவது ஆண்டாக இந்திய நாட்டின் தேசியக் கொடியை ஏற்றுவதில் பெருமிதம் கொள்கிறேன். 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றியது பெருமை. இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மக்களுக்கு வணக்கங்கள்.

கருணாநிதி அவர்களின் நூற்றா ண்டு விழா ஆண்டில் கோட்டையில் கொடி ஏற்றியதை எண்ணி பெருமை கொள்கிறேன். என்று தெரிவித் துள்ளார்.

# ரஷ்ய படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள டோனெட்ஸ்க் பிராந்தியத்தின் தீவிர போர்!



ரஷ்ய படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள டோனெட்ஸ்க் பிராந்தியத்தின் மேற்குப் பகுதிகளில் தீவிர போர் இடம்பெற்று வருகிறது என ரஷ்ய இராணுவத்தின் பிராந்திய செய்தி தொடர்பாளரான விளாடிமிர் ரோகோவ் தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த பகுதிகளில் உக்ரைன் படைகள் ரஷ்ய துருப்புகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாகவே போர் நிலை தீவிரமடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உக்ரைனிய துருப்புக்கள் அசோவ் பிராந்தியத்தில் நிறுவப்பட்டுள்ள ரஷ்ய எல்லைகளைத் தாக்க முயன்றதால், இவ்வாறான தாக்குதல்கள் மேலும் வலு பெற்றுள்ளது என ரோகோவ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், ரஷ்ய சார்பு அண்டை நாடுகளில் போர் தொடர்பிலான நிலையற்ற நடவடிக்கைகளுக்கு மத்தியில் ஒரு தடுப்பாக பெலாரஸுடனான தனது எல்லையைப் பாதுகாக்கும் துருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதாகப் போலந்து கூறியுள்ளது.

மேலும், கிழக்கு போலந்தில் உள்ள ஜரிலோவ்காவில், பெலாரஸ் எல்லைக்கு அருகில் சமீபத்தில் நிறுத்தப்பட்ட சில துருப்புக்களுடன் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் மரியஸ் பிளாஸ்சாக், சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ரஷ்ய படையினரின் பீரங்கி தாக்குதலினால் பச்சிளம் குழந்தை உள்ளிட்ட 7 பேர் பலி!



தெற்கு உக்ரைனின் கெர்சான் மாகாணத்தில் ரஷ்ய படையினர் நடத்திய பீரங்கி தாக்குதலில், பிறந்து 23 நாள்களேயான பச்சிளம் பெண் குழந்தை உள்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர் என உக்ரைன் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே கடந்த 18 மாதங்களாக போர் நடந்து வருகிறது.

இந்த நிலையில், ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள நீப்பர் ஆற்றின் இடது பக்க கரையில் உக்ரைன் படையினர் முகாமிட்டு வருவதாக தகவல் பரவியது.

ஆனால், இந்த தகவலில் உண்மையில்லை என உக்ரைன் பாதுகாப்புத் துறை இணையமைச்சர் மறுத்தார். எனினும், இந்தத் தகவலின் அடிப்படையில் அப்பகுதியில் ரஷ்ய படையினர் பீரங்கி தாக்குதல் நடத்தினர்.



இந்தத் தாக்குதலில் ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஷிரோகா பால்கா கிராமத்தில் வசித்து வந்த நபர், அவரது மனைவி, 12 வயது மகன், பிறந்து 23 நாள்களே ஆன பெண் குழந்தை உள்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

## கனடா மக்களுக்கு கடும் எச்சரிக்கை!

கனடாவின் கல்கரி பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் கடுமையான வெப்பநிலை நிலவும் எனவும் இது தொடர்பில் மக்கள் கூடுதல் அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கனேடிய சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த நிறுவனம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பகல் நேரத்தில் முப்பது பாகை செல்சியஸ்சை விடவும் அதிகமான வெப்பநிலை நீடிக்கும் என தெரிவிக்கப் படுகிறது.

தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்கு இந்த வெப்பநிலை அதிகரிப்பு காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை விடுக்கப்படும் பிராந்தியங்களில் வாழ்வோர், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் சுகாதார நிலை குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக வெப்பநிலை காரணமாக நோய்வாய்ப்படக்கூடியவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த பிரதேச மக்கள் திறந்தவெளியில் இருப்பதனை தவிர்த்து அதிக அளவு நீரை பருகுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அழகில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949